விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 29 ரகு ஆகிர் 12 இதழ் 307

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 15-12-1986

## புலிகள் - ஈ பி. ஆர். எல். எவ். பிணக்கு

## ஈரோஸ் பலத்த கண்டனம்!

யாழ்ப்பாணம், திங்கள் "தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்குமிடையே நேற்று முன்தினத்திலிருந்து உருவாகியுள்ள சூழ்நிலையானது, இரு இயக்கங்களுக்கிடையிலான மோதலென்பதனை உறுதிப்படுத்தியுள்ளது. மக்கள் நலனையும் போராட்ட முன்னெடுப்பையும் புறக்கணிக்கும் தன்மையையும் இம்மோதல் வெளிப்படுத்தியுள்ளது"

ஈழப் புரட்சிகர அமைப்பு (ஈரோஸ்) பொது ஆணைக்குழு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரி

(5ம் பக்கம் பார்க்க)

### 'விஜி' விவகாரம் புலிகள் அறிக்கை

சென்னை, ஞாயிறு யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரனின் கடத்தலுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள்

(5ம் பக்கம் பார்க்க)

### பி பி ஸி அறிவிப்பு

லண்டன் டிச 14

இலங்கையில் இருதமிழ்த் தீவிரவாதக் குழுக்களிடையேயான மோதல்கள் தொடர்ந்தும் கிழக்கில் இடம் பெற்று வருவதாக பி. பி. ஸி. அறி

[5ம் பக்கம் பார்க்க]

● வடக்கில் 'இரத்தக் களரி'யின்றி

# புலிகள்-ஈ.பி.ஆர்.எல்.எவ்.

# சர்ச்சை தணிந்தது

## நூற்றுக்கணக்கானோர் சரண்; ஆயுதங்கள், உடமைகள் கைப்பற்றியதாகவும் அறிவிப்பு

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்குமிடையே நேற்று முன்தினம் இரவு ஆரம்பமான சர்ச்சை 'இரத்தக்களரி' யின்றி தணிந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் வடக்கில் பெரும்பாலான ஈ. பி. ஆர். எல் எவ் முகாம்கள் வீழ்ச்சியடைந்துள்ளனவென்றும், அவ் இயக்கத்தின 300க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சரணடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வடக்கில் அனைத்து ஈ பி ஆர் எல் எவ் முகாம்களையும் முற்றுகையிட்டு தமது நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

இம் முற்றுகையின் போது சிலமுகாம்களில் குண்டுவெடிச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தம் களும்கேட்டபோதிலும் சில நிமிடங்களில் அச்சத்தங்கள் ஓய்ந்து அவ்விடங்களில் அமைதிநிலவியது.

ஈ பி ஆர். எல். எவ் முகாம்களிலிருந்து பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் 300க்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டும் சரணடைந்து விட்டதாகவும் விடுதலைப்புலிகள் பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கிறார்.

### இருவர் பலி

மானிப்பாயில் உள்ள ஈ பி. ஆர் எல் எவ் முகாம் ஒன்றில் மாத்திரம் இடம்பெற்றமோதலில் இரு ஈ பி ஆர் எல் எவ் உறுப்பினர் மரணமானதாகவும் அப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

யாழ் குடாநாட்டிலுள்ள

(5-ம் பக்கம் பார்க்க)

### ஈ பி ஆர் எல் எவ்விடமிருந்து கைப்பற்றிய பொருட்கள் புலிகள் முகாமில்

யாழ்ப்பாணம், திங்கள், ஈ பி ஆர் எல். எவ் முகாம்களிலிருந்து கைப்பற்றப்பட்ட வாகனங்கள் மற்றும் பொருட்கள் விடுதலைப் புலிகளின் பிரதான முகாமொன்றில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் ஈழம் முத்திரைகள், தபாலட்டைகள், ரீ. வி டெக், றேடியோ லைசன்ஸ் பத்திரங்கள் போன்றவை வீதிகளில் சிதறிக் கிடந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது கடந்த சில வாரங்களாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை

(5-ம் பக்கம் பார்க்க)

### "ஈ பி ஆர் எல் எவ் இயக்கத்தை தடைசெய்ய உதவுங்கள்"

— தமிழீழ விடுதலைப் புலிகள்

யாழ்., திங்கள் 'ரெலோ' இயக்கத்தின் பாதையில் செயற்பட்ட ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை பரிபூரணமாக தடை செய்ய - விடுதலையை வென்றெடுக்கத் தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் தமது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் நல்க வேண்டும்"

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

### போராளிகள் - சிதம்பரம் குழு இன்று சந்திப்பு

#### எம் ஜி ஆர், மூப்பனாரும் உடனிருப்பர்

[சென்னை]

இந்திய மத்திய இணையமைச்சர் திரு சிதம்பரமும், நட்வர் சிங்கும் தமிழ்ப் போராளிக் குழுக்களின் தலைவர்களை இன்று சென்னையில் சந்திக்கவுள்ளனர். இலங்கை இனப் பிரச்னைக்குத் தீர்வுகாண இலங்கை அரசு கொடசியாகச் சமர்ப்பித்த பிரேரணைகள் குறித்து இணையமைச்சர்கள் தமிழ்த் தலைவர்களுடன் பேச்சு நடத்துவர் எனத் தெரியவருகிறது.

தமிழக முதல்வர் எம் ஜி. ராமச்சந்திரன். அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு கருப்பையா மூப்பனார், தமிழக உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன் ஆகியோரும் இப்பேச்சுகளில் உடனிருப்பர்

#### ராஜீவிடம் அறிக்கை

இப்பேச்சுவார்த்தைகளின் பின்னர் இணையமைச்சர் குழு இன்று புதுடில்லிசென்று இந்தியப் பிரதமரிடம் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்பின்னர் மீண்டும் நாளை சென்னைவரும் இக்குழு அன்று இரவே கொழும்பு செல்லு

[5ம் பக்கம் பார்க்க]

### கிழக்கில் உத்தேச தமிழ் மாகாணசபை:

## இந்தியாவிடம் புதிய வரைபடம் இலங்கையினால் கையளிப்பு!

சென்னை, டிச. 14 இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தமிழ்மாகாணசபை ஒன்றை நிறுவும் வகையில் மேற்கொள்ளவுள்ள மாகாண, புவியியல் மாற்றங்கள் பற்றிய வரைபடங்களை இந்திய அரசாங்கத்திடம் இலங்கை அரசு புதிதாகச் சமர்ப்பித்துள்ளது இவ்வரைபடங்களை இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் திரு பேர்னாட் திலகரத்தின இந்திய அரசிடம் சமர்ப்பித்தார்.

இந்திய இணையமைச்சர்கள் குழு தமிழ்ப்போராளிகளை சந்திக்க முன்னர் வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களில் தமிழர் தாயகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற தமிழர் கோரிக்கைக்கு

(5ம் பக்கம் பார்க்க)

உ
சிவமயம்

## ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ

## இடமாற்ற அறிவித்தல்

அன்புடையீர்

பெரியகடை 13 14 இலக்கத்தில் இதுவரை காலமும் இயங்கிய எமது ஸ்தாபனம் இன்றைய சூழ்நிலை காரணமாக கே. கே. எஸ் வீதியில் உள்ள இலக்கம்: 79 M O ஸன்ஸ் கட்டிடத்தில் (15-12-86) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம்

வாடிக்கையாளர்களாகிய நீங்கள் தொடர்ந்தும் எமக்கு ஆசியையும் ஆதரவையும் வழங்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.

79, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். [C 6366]

### வடக்கு - கிழக்கில்

## தீவிரவாத முகாம்களை தாக்க வேண்டாமென இந்தியா கோரிக்கை!

கொழும்பு, ஞாயிறு "வடக்கு - கிழக்குப் பிராந்தியங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அங்குள்ள தீவிரவாதிகளின் முகாம்கள் மீது தாக்குதல்கள் நடத்துவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்" என இந்தியஅரசு இலங்கை அரசிடம் கேட்டிருப்பதாக கொழும்பில் அரசாங்க வட்டாரங்கள்மூலம் தெரியவருகிறது.

கடந்தசில வாரங்களுக்கு முன்னர் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள தீவிரவாத முகாம்கள் மீது ராணுவத்தினர் தாக்குதல்கள் மேற்கொண்டதாகக் கிடைத்த

(5ம் பக்கம் பார்க்க)

### இம்மாதம் 18ந் திகதி முதல் அடகுவைத்தோர் சங்கம் மறியல் போராட்டம்!

யாழ்ப்பாணம், திங் மக்கள் வங்கியின் வடபகுதி அனைத்துகிளை அலுவலகங்கள் முன்பாக இம்மாதம் 18ம் திகதி தொடக்கம் காலவரையற்ற மறியல் போராட்டம் நடத்துவதென்றும். அடகு

(5-ம் பக்கம் பார்க்க)

### ஸ்மிதா பட்டேல் காலமானர்

புதுடில்லி ஞாயிறு பிரபல இந்தித் திரைப்பட நடிகையான ஸ்மிதா பட்டேல் நேற்றிரவு பம்பாயில் காலமானர் இவர் மூளையில் இரத்தப்பெருக்கு ஏற்பட்டதையடுத்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு நாள் Hy-Line இனப் பேடட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. அத்துடன் ஒரு நாள் இறைச்சிக் குஞ்சும் ஓடருக்கு எடுத்துக் கொடுக்கப்படும். உடன் தொடர்புகொள்ளவும். ராசா ஸ்ரோரேஜ் ஸ்ரோர்ஸ், நெல்லியடி (மத்திய சந்தை முன்பாக). [C 6285]

நத்தார் புதுவருட வாழ்த்துக்கம், திருமண அழைப்பிதழ்களும், சகல விலைகளிலுமான முத்திரை வகைகளும் பெற்றுக்கொள்ள அரஸ் ஜவுளி அகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24001 [C6299]

Sansui Tuner Amp, Cassette deck, Record player, Speakers விற்பனைக்குள்ளன. சிறிதளவேபயன்படுத்தியவை. dyn ads 476, பிரதான வீதி, சுண்டுக்குளி [சென்ற்ஜோன்ஸ் கல்லூரி முன்பாக.]

A3322

Portable Typewriter (மிகச் சிறிதளவே பயன்படுத்தியது) விற்பனைக்குள்ளது. dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி [C 3330]

சகல விதமான றேடியோ உதிரிப்பாகங்கள், ரெலிவிசன் துணைப்பாகங்கள் விற்பனைக்குண்டு. திருத்துனர்களுக்கு விசேட கழிவுண்டு நியூ சிற்றி றேடர்ஸ், 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், போன்: 24055 (A3307]

புதிய Portable Typewriters Optima Remington Silvereed மற்றும் Standards Typewriters விற்பனைக்கு உண்டு. Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். C-6343

வீட்டுத்தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, ஹோல் செற், கசற் றேடியோகள், Show case, Formica சாப்பாட்டு மேசைகள், வயலின், சிங்கர் தையல் மெஷின், கிளாஸ் வகைகள், Fisher டெக்; Lambrata ஸ்கூட்டர் T. V. Stand, விருந்தை கதிரைகள், கட்டில் மெத்தைகள், அல்மாரி, Steel அலமாரி Cas Cooker, புத்தக ருக்கைகள், கடை Show case மற்றும் பல உடன் விற்பனைக்கு M. தியாகராஜன் 326 பிரதான வீதி யாழ்ப்பாணம். (C6360)

Sony 3000 வீடியோ கமரா Record Player (Akai), Akai டெக், Akai ஸ்பூக்செஸற், மற்றும் அம்பிலிவடர், மின் விசிறி முதலியன 131, அரசடி ரோட், கந்தர்மடம். (சரஸாலயம் முன்பாக) (C 6368)

தும்பளை வீதிக்கு மேற்குப் புறமாக மணல் ஒழுங்கையில் $3\frac{1}{2}$ பரப்பு வீடு கட்டுவதற்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; க. இரத்தினம், காரைக்கலட்டி, தும்பளை, பருத்தித்துறை (C 6370)

Cockerels and Pullets இவப்பு சேவற் குஞ்சுகள் 17 புதன்கிழமையும், 20 சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும் விலை 5/25 Lohmann, Hyline, Tegal, Golden Comets பேட்டுக் குஞ்சுகள் 20-12-86, 13-1-1987, 13-2-1987 விநியோகிக்கப்படும். உடன்பதிவுசெய்யவும். Nallur Farm Centre, (நல்லூர் வீடியோ சென்றர்) 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். [C-6372]

## விற்பனைக்கு

நல்ல பராமரிப்பிலுள்ள 100 லவ்பேர்ட்ஸ் (கூட்டுடனும்), பொமேரியன் நாய்க் குட்டி கூட்டுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: பரமானந்தன், 18/A சிவகுருநாதர் வீதி. நீராவியடி, யாழ்ப்பாணம். (C 6380)

மெய்கண்டான் லீலா கலண்டர்கள், டயறிகள் போதிய கையிருப்பிலுண்டு கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள் மொத்த வியாபாரிகள் வியாபார ஸ்தாபனத்துக்கு அன்பளிப்பாக வழங்கக்கூடிய விலாசம் அடிக்கப்படாத கலண்டர்களுமுண்டு. மக்மிலன் புத்தகசாலை, 03, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C 6365)

Honda Chaly மோட்டார் சைக்கிளும் Sisil R 80 (in good condition) குளிர் சாதனப் பெட்டியும் விற்பனைக்கு உண்டு தொடர்பு; விளம்பரதாரர் 13/1, Chetty St Lane, Nallur Jaffna. (C 6373)

## தேவை

2''—$2\frac{1}{2}$'' சீனச்சட்டி பைப் மொத்தமாகவும் துண்டுகளாகவும் தேவை விபரங்களுக்கு 84A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [C-6364]

கற்பூரம், பெழுகுதிரி, அப்பளம ஆகிய வேலைகளுக்கு பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும் விலாசம்; V அரியரெட்ணம். பழைய நம் 151, புதிய நம 345 கோவில் வீதி, நல்லூர். குறிப்பு (நல்லூர் கோவில் பின் வீதி) (C 6377]

## வகுப்புக்கள்

O/L-87க்கான எமது புதிய வகுப்புக்கள் 14-12-86 (ஞாயிறு) காலை 9 மணிக்கு ஆசிரியர் J R சூரி அவர்களின் விஞ்ஞான வகுப்புடன் ஆரம்பமாகின்றன. Science Centre-Tellippalai. C 6290

TOEFL Essay Writing பயிற்சி வகுப்புக்கள் இரு மணித்தியாலம் A/L, Exam Grammar ஆரம்பம் 20-12-86. சனி, ஞாயிறு மாலை 3-5 S B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (C 6378)

O/L 87க்கான புதிய வகுப்புக்கள் 19-12-86 காலை 10-30 இற்கு வேலணை மத்திய கல்லூரி ஆண்கள் விடுதி முன்பாக ஆரம்பமாகிறது. கணிதம், விஞ்ஞானம் ஆசிரியர் V குமரன. (C 6376)

## சேவை

தட்டச்சு இயந்திரங்கள் Typewriters சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். காரியாலயங்களுக்கும், இல்லங்களுக்கும் வந்து திருத்தித் தரப்படும். Fudo Enterprises, 39/17 Power House Road, 3-rd Lane, Jaffna. C-6342

டாக்டர், இஞ்சினியர், பட்டதாரிகள் மற்றும் ஏனையோரும் திருமணம் நிச்சயிக்க உடன் தொடர்பு கொள்ளவும்; பிரபல ரேகை எண் சோதிட நிபுணர் செ. நாகேந்திரராசா. 174/16 கோவில் வீதி. [கைலாச பிள்ளையார் கோவிலடி.] நல்லூர். [C 6305]

## 28-ம் திகதி பரீட்சை

பண்டத்தரிப்பு, ஞாயிறு வவனியா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் பரிசாரகர்களாக தெரிவு செய்யப்பட்டு பயிற்சி பெற்றவர்களுக்கான பரீட்சை யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் இம் மாதம் 28ம் திகதியன்று நடைபெறவுள்ளது.

## WANTED

Wanted Qualified and Experienced Supervisor for carpentry project Apply in Person. United Engineers - Sai Saw Mill 91, Ramanathan Road, Kallady, Jaffna. (C 6387)

## மணப்பந்தல்

யாழ் இந்து வேளாள குடும்ப உத்தியோகம் பார்க்கும் மற்றும் படித்த தனியார் நிறுவனம் நடத்தும் செவ்வாய்க் குற்றம் இல்லாத இரு மகன்களுக்கு படித்த நல்ல குடும்ப வெளிநாட்டிற்குப் போகக் கூடிய 33வயதுக்குட்பட்ட அழகிய மணப் பெண்கள் தேவை. தொடர்பு நேரடியாக வைக்கப்படும் தரகர் தேவையில்லை. விபரங்களுக்கு: விளம்பர இல: C 6353 C/o ஈழநாடு, யாழ்பாணம். (C 6353)

யாழ்ப்பாண இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் தங்கள் அழகிய, சிவப்பு நிறமுடைய செவ்வாய்க் குற்றமற்ற மகளுக்கு இதே இனத்தைச் சேர்ந்த 40 வயது குட்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். சீதனம் நியாயமாகக் கொடுக்கப்படும். 31 வயது எஞ்ஜினியர் (Charted Civil Engineer) சகோதரனுடன் மாற்றுத் திருமணமும் செய்யலாம் சாதகக் குறிப்பு, மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல: C 6374 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 6374)

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைதடி சித்த வைத்தியப் பகுதியிற் சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 30-12-86 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/-உம், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 25/-உம் பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகளைச் சமர்ப்பித்துக் கேள்விப்படிவங்களை இப் பல்கலைக்கழகத்தின் நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற் குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.
(A 3333)

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

### ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில்

புங்குடுதீவுகிழக்கு புங்குடுதீவு கணபதிப்பிள்ளை தம்பையாவின் மரணசாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

மரணமெய்தியவர்.

வழ. இல: த/111

கணபதிப்பிள்ளை தம்பையா கைம்பெண் சண்ணம்மா, புங்குடுதீவு, கிழக்கு, புங்குடுதீவு

மனுதாரர்.

எதிர்

1 தம்பையா பிரேமானந்தன், புங்குடுதீவு கிழக்கு, புங்குடுதீவு, தற்போது செல்டாகுநலா, 8873 ஆம்டென், சுவிற்சர்லாந்து.

பராயமற்றவர்கள்:

2. தம்பையா விஜயானந்தி
3. தம்பையா நிததியானந்தன்
4. தம்பையா சுபானந்தி
5. தம்பையா சிறிகுகானந்தன்
6. தம்பையா சுசிபானந்தி
7. தம்பையா சிவானந்தன்
8. தம்பையா துசானந்தி

இவர்கள் பராயமற்றவர்கள் இவர்கள் தங்கள் வழக்குப பாதுகாவலரான 9ம் எதிர்மனுதாரர் மூலம்.

9. கணபதிப்பிள்ளை விசுவலிங்கம், புங்குடுதீவு, 7ம் வட்டாரம்

இவர் 2 முதல் 8 வரையிலான பராயமற்ற எதிர் மனுதாரர்களின் வழக்குப் பாதுகாவலராக.

எதிர்மனுதாரர்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலேபெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுளளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987ம் ஆண்டு தைமாதம் 7ந்திகதி முற்பகல் 9-00மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள். எதிர் மனுதாரர்கள் மன்றில் சமுகமளிக்குமாறும் கேட்கப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ந் திகதி, ஊர்காவற்றுறை.

நீதிமன்றக் கட்டளைப்படி
சு. வ. கணேசன்,
பதிவாளர்,

வரைவு:
ச. இளங்கோவன்,
மனுதாரரின் சட்டத்தரணி.
(C 6330)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில்

புளியங்கூடல் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இராமலிங்கம் பாலசுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமற்றமரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

-மரணமெய்தியவர்.

இல: ச/113

இராமலிங்கம் பாலசுப்பிரமணியம் கைம்பெண் சரோஜா, புளியங்கூடல், ஊர்காவற்றுறை

-மனுதாரர்.

எதிராக

பராயமற்றவர்கள்:

1. பாலசுப்பிரமணியம் மகள் யாமினி
2. பாலசுப்பிரமணியம் பாஸ்கரன்
3. பாலசுப்பிரமணியம் மகள் பத்மினி
4. பாலசுப்பிரமணியம் சசிகரன்

எல்லோரும் புளியங்கூடல் ஊர்காவற்றுறை.

5. இராமலிங்கம் சோமசுந்தரம், வேலணை மேற்கு, வேலணை

இவர் 1 முதல் 4 வரையிலான பராயமற்ற எதிர் மனுதாரர்களின் வழக்குப் பாதுகாவலராக.

-எதிர்மனுதாரர்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட தத்துவ வழக்கு, மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987ம் ஆண்டு மாசி மாதம் 11ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறும், பராயமற்ற எதிர்மனுதாரர்களையும் அவர்களின் வழக்குப் பாதுகாவலரான 5ம் எதிர் மனுதாரரையும் அன்றைய தினம் இந் நீதிமன்றில் தோன்றுமாறும் இத்தால் தேவைபபடுத்தப்படுகின்றார்கள்.

1986ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ம் திகதி, ஊர்காவற்றுறை.

நீதிமன்றக்கட்டளைப்படி,
சு. வ. கணேசன்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
ஊர்காவற்றுறை.

வரைவு;
ச. இளங்கோவன்,
மனுதார் சட்டத்தரணி;
(C-6329)

## பிரயாண ஒழுங்குகள்

| | | |
|---|---|---|
| C. T, பாலசுப்பிரமணியம் | சுன்னாகம் | G 0384126 |
| S S யோகநாதன் | நல்லூர் | G 0374481 |
| N. K சிறீதரன் | அல்வாய் | J 0009818 |
| N. N· அன்ரனி | யாழ்ப்பாணம் | G 0305547 |
| T. S. ராஜா | கொழும்பு | H 0221243 |
| V. S. தங்கேஸ்வரன் | இணுவில் | H 0044193 |
| V. பண்டாரம் | கொழும்பு | F 336195 |
| M. மகேஸ்வரன் | சண்டிலிப்பாய் | H 0320008 |

மேற்கூறிய நபர்களுக்கு பிரயாண ஒழுங்குகள் முற்றாகிவிட்டன. உடனடியாக எனது அலுவலகத்திற்கு வந்து தொடர்புகொள்ளவும்.

### டாக்டர்

## கே. எஸ். பரம்சோதிநாதர்,

பிரசாந்தி மெடிக்கல் கிளினிக்,
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில். [A3253]



பருத்தித்துறை கிராமக் கோட்டடியில் கோப்பாய் கல்வி மூலவள நிலையத்தின் கண்காணிப்பில் இயங்கிவரும் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியிலே பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் கல்வி அதிகாரி திரு ஆ. தங்கராஜா பரிசில் வழங்குவதையும், அருகில் பாலர் பாடசாலை ஆசிரியை செல்வி உதயகுமாரி நிற்பதையும் படத்தில் காணலாம்.

(பருத்தித்துறை நிருபர் திருச்செல்வம்)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம்' திங்கள்

காரைநகர் பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய இளைப்பாறிய திருமதி இராசம்மா தில்லையம்பலத்தின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மேற்படி விழாவில் யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இளைப்பாறிய அதிபர் திருமதி இராசம்மாவுக்கு பெற்றோர் பாராட்டுப் பத்திரம் வழங்கியும், தங்கப்பதக்கம் அணிந்தும், கௌரவித்தனர்.

''ஆசிரியர் பற்றாக்குறையின் மத்தியில் இளைப்பாறிய அதிபர் தமது சேவையைத் திறம்பட நடாத்தியும், மக்களுக்கே தமது முப்பத்தொரு வருடகால ஆசிரியப் பணியை மேற்கொண்டமை மகத்தானது'' என்று. திரு. ச சிவஞானம் இளைப்பாறிய அதிபரைப் பாராட்டினார்.

யாழ்ரன் கல்லூரி அதிபர் திரு கே கே நடராசா தமது பாராட்டுரையின் போது' இளைப்பாறிய அதிபர் கடமையுணர்ச்சியுடையவர் என்றும் மாணவரின் கல்விவளர்ச்சியில் அதிக ஆர்வமும் ஊக்கமும் உள்ளவர் என்றும் கூறினார்.

திருமதி தி. இராசம்மா தமது பதிலுரையில்' நல்ல முறையில் பணியாற்ற பெற்றோர் தமக்களித்த ஒத்துழைப்பே காரணம் என்றும் அவர்களுக்கு தாம் என்னாளும் நன்றியுடையவராக இருப்பதாகவும் கூறினார்.

## இரவு நேர தொலைபேசி பரிவர்த்தனை நிலைய பதிவுகள் அநுராதபுரத்திற்கு மாற்றம்

வவனியா, ஞாயிறு

தகுந்த காரணம் எதுவுமின்றி வவனியாவில் இயங்கி வரும் தொலைபேசி பரிவர்த்தனை நிலைய இரவுநேர தொலைபேசி பதிவுகளை அநுராதபுரத்துக்கு மாற்ற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இக்கட்டான இச்சூழ்நிலையில் பொது மக்கள் பலர் இப்பரிவர்த்தனை நிலையத்திலிருந்தே பல பகுதிகளுக்கும் தொலைபேசி தொடர்புகளை பெற்று வருகின்றனர். மேற்படி இரவுநேர பதிவுகளை அநுராதபுரம் மாற்றுவதையிட்டு பொது மக்கள் பலத்த ஆட்சேபம் தெரிவித்து வவனியா பிரஜைகள் குழுவிடம் புகார் செய்துள்ளனர்.

இதனையடுத்து வவனியா பிரஜைகள் குழு தலைவர் திரு. சொர்ணபால இவ்விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு உயரதிகாரிகளை கேட்டுள்ளார். (சி)

## வரியிறுப்பாளர் சங்கத்தை புனரமைக்க முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

மின்சாரத்தடை, வரி உயர்வு போன்ற பல்வேறு குறைகளை உரிய இடங்களில் முறையிட்டு நிவிர்த்தி காண்பதற்கு உரும்பிராய் ஊரெழுவில் வரியிறுப்பாளர் சங்கம் ஒன்று தேவை என்பதனால் உரும்பிராய் விழிப்புக்குழுத் தலைவர் திரு. த சந்தையா அமைப்பாளராகக் கொண்டு உரும்பிராய் கிழக்கு ஞான வைரவர் கோவிலடி வாசிகசாலையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அக்கூட்டத்துக்குச் சமூகமளித்தவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் வரியிறுப்பாளர் சங்கம் ஒன்று இயங்கி பின்பு செயலிழந்து இருப்பதனால் முன்னைய சங்க நிர்வாகிகளைச் சந்தித்து புனரமைப்புச் செய்வதற்கு ஒருகுழுவைத் தெரிவு செய்தனர். அக்குழுவிலுள்ளவர்கள் பின்வருமாறு திரு. சி நடராசா, டக்டர் கே. இராஜேந்திரன், திரு. கே. சிறிபத்மநாதன், திரு ரேயல் கனகசுந்தரம், திரு எஸ் பரமானந்தன், திரு கே. தில்லையம்பலம் திரு. ஏ. கதிரேசபிள்ளை, திரு எஸ் கனகராசா, திரு எஸ் பாலசுந்தரம், திரு கே. சுகந்தன் இக்குழுவின் அழைப்பாளராக திரு. எஸ் பரமானந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

வேறு இடங்களில் நடைபெறும் வரியிறுப்பாளர் சங்கங்களுடனும் தொடர்பு கொண்டுசங்கங்களை அமைக்கவும் விசேடபொதுக்கூட்டம் ஒன்றைக்கூட்டி வரியிறுப்பாளர் சங்க நிரந்தர உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்து புதுப்பிக்கவும் இக்குழு கடமையாற்றும் என்று முடிவுசெய்யப்பட்டது.

## ஊர்காவல்படை நபரின்—— துப்பாக்கி வெடித்ததில் விரல் துண்டானது

வவனியா, ஞாயிறு

துப்பாக்கி வெடித்ததில் தமது இடதுவிரல் துண்டாடப்பட்ட நிலையில் நெடுங்குளம் வாசியான ஊர்காவல் படையைச் சேர்ந்த ரஞ்சித் ஏக்கநாயக்கா [வயது 18] வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையிலேயே அவர் வைத்திருந்த துப்பாக்கி தவறுதலாக வெடித்ததாக கூறப்பட்டுள்ளது.

இதேசமயம் அவ் வீதியால் சென்ற மாமடுவ வாசிகளான இரு குடும்ப பெண்கள் இச்சம்பவத்தால் சூடுபட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


விக்ரு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

A/L கலை, வர்த்தகம் மீட்டல் வகுப்புக்கள்

தனித்துவம்பெற்ற ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| பௌதிகவியல் | — | திரு. கிருஷ்ணானந்தன் |
| வர்த்தகம் | — | திரு. இலங்கா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் | — | திரு. குணரெத்தினம் |
| புவியியல் | — | திரு குணராசா |
| அரசியல் | — | திரு மஃறூப் |

DAY CLASS: காலை 8 மணி
SAT, SUN: காலை 8 மணி

(A3247)



புஸ்பா ரேட்ஸ்

(11/4 A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்)



ஸ்தாபனத்தார் சகல வாடிக்கையாளர்களுக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

பல வருடங்களாக யாழ் மாவட்ட மக்களுக்கு தேவையான கேக்வகைகளுக்கு தேவைப்படும் உப பொருட்கள், சிறு கைத்தொழில் நடத்துவோருக்கு தேவைப்படும் மூலப் பொருட்கள் அனைத்தையும் நாமே நிறைவு செய்துள்ளோம்.

1987-ம் ஆண்டிலும் உங்கள் தேவைகளை நிறைவு செய்ய காத்திருக்கின்றோம்—

கேக் வகைக்கான பொருட்கள்!
சிற்றுண்டி வகைக்கான பொருட்கள்!!
குளிர்பானத் தயாரிப்புக்கான பொருட்கள்!!!

எதுவானாலும், வாருங்கள், பாருங்கள், வாங்குங்கள்!

யாழ். நகரில் பழைய நிறுவனமும் மக்கள் மத்தியில் நினைவுள்ளதும், அபிமானத்தைப் பெற்ற ஒரே ஸ்தாபனம்:-

புஸ்பா ரேட்ஸ், (எசன்ஸ் கவுஸ்)

11/4 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ. பேசி:—24237

(A 3251)



ரெமிங்ரன் ரைப்றைட்டர்கள்

உலகில் சர்வதேச தரத்துக்கு இணையான ரெமிங்ரன் ரைப்றைட்டர்கள், யாழ்ப்பாணத்தில் இப்போது விற்பனையாகின்றன அதிநவீன செயல்பாடுகளுடன், மற்றைய ரைப்றைட்டர்களை விட பாரம்குறைந்தும், தொழில்நுட்பம் நிறைந்தது ரெமிங்ரன் ரைப்றைட்டர்கள் யாழ்ப்பாண மக்களால் 50 ஆண்டுகளாக விரும்பி வாங்கப்படுவது ரெமிங்ரன் ரைப்றைட்டர்கள்.

Remington Typewriters

Made in Brazil by U S. A. Firm.

Remington Model No 15 (Portable)
Remington Model No. 25 (Portable)
Remington Model No. 33 Portable)
Remington Model No. 150 -

விலைகள்: ரூபா 2,950-00 முதல்.

வர்த்தக விசாரணைகள்!

ஓவர்சீஸ் இன்ரநஷனல்

(முகமதலி அப்துலலி பின்னால்)

5, 7, பெரியகடை - யாழ்ப்பாணம்.

போன் : 22641. A 3331

**மணிவாக்கு**

மாலுங்கரட்டி வழிகாட்டி
வாராவுலக நெறியேறக்
கோலங்காட்டி ஆண்டானைக் கொடியேன்
என்றோ கூடுவதே!

—மாணிக்கவாசகர்

# நமது நோக்கு

## நடைமுறை விதிகளும் நட்டாமுட்டித்தனங்களும்

மனித உரிமைகள் இந்த நாட்டில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுவருவது குறித்து சர்வதேச ஸ்தாபனங்கள் எழுப்பிவரும் கண்டனக் குரலுக்கு அதிகாரத்தில் இருப்பவர்கள் அதிகம் அக்கறை காட்டிக்கொள்ளாது போனாலும் சர்வதேச சமுதாயத்தின் முன்னால் இது ஒரு ஜனநாயகநாடு, சகல மக்களும் சமமாக நடத்தப்படுகிறார்கள் என்று காட்டிக்கொள்வதில் அரசுத் தலைவர்களுக்கு தர்மசங்கடமேற்பட்டிருப்பது வெளிப்படையாகிவருகின்றது.

சிறைச்சாலைகளில் தமிழ்க் கைதிகள் சித்திரவதை செய்யப்படுவது குறித்தும், விசாரணைக்கென அழைத்துச் செல்லப்படுகிறவர்கள் காணாமல் போவது குறித்தும் சர்வதேச மன்னிப்புச் சபை அடிக்கடி இலங்கை அரசாங்கத்தை உலுப்பி வருகின்றது. இழக்கிலங்கையில் காணாமல்போனவர்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை எழுப்பிய வினாக்களுக்கு இலங்கை அரசு சார்பில் சரியான பதில் கொடுக்கப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் இலங்கை நீதிமன்றங்களிலேயே நிவாரணம் கோர வசதியுண்டு எனக்கூறி தட்டிக்கழிக்கப்பட்டது. என்றாலும் இவ்விடயத்தை அப்படியே விட்டுவிட மன்னிப்புச் சபை விரும்பவில்லை. அமெரிக்கா சென்றுள்ள தேசிய பாதுகாப்பு அமைச்சரை நேரில் சந்தித்து உரையாடவும் அச்சபை உறுப்பினர்கள் தயாராகியுள்ளனர்.

இவ்வாறு இலங்கைத் தலைவர்கள் வெளிநாடுகளுக்குச்சென்று தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு பயங்கரவாத முலாம்பூசி பிரசாரம்செய்ய முற்படும சமயங்களில் அங்குள்ளவர்கள் இங்கே நடக்கும் அட்டூழியங்கள் பற்றி கேள்வி எழுப்பும் போது பதில் சொல்லமுடியாமல் திணறவேண்டியேற்பட்டுள்ளது.

இந்த நிலைமை சமீபகாலமாக அதிகரித்திருப்பதாகத் தெரிகின்றது. கனடாவில் இலங்கை அகதிகள் விடயம் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்திருப்பது ஒருபுறமிருக்க, அங்கே இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டவரின் தகுதிகள் பற்றியும், அவர் இங்கே இராணுவ அதிகாரியாக இருந்தபோது மேற்கொண்டதான மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றியும் உலக நாடுகளில் உருவாகியுள்ள அபிப்பிராயங்கள் இலங்கைக்கு சாதகமாக இல்லை.

எனவே மனித உரிமைகள் இங்கே சரியாகவே பேணப்படுகின்றன என உலகுக்குக் காட்டுவதும் அதற்கான பிரசாரத்தை செய்வதும் இன்று அரசுக்குத் தேவையாகவுள்ளது. அண்மையில் பாதுகாப்புத்துறை செயலாளர் ஜெனரல் சேப்பால ஆட்டிகல பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்பியுள்ள ஒரு குறிப்புரையும் அதற்கு பத்திரிகைகள் கொடுத்துள்ள விளம்பரமும் இதனையே காட்டுகின்றன.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தில் எவரும் கைதுசெய்யப்படும்போது கட்டாயமாக நடைமுறை ஒழுங்குவிதிகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என செயலாளர் வற்புறுத்தியுள்ளார்.

"சர்வதேச மன்னிப்புச் சபை, மனிதஉரிமைகள் ஆணைக்குழு போன்றஸ்தாபனங்கள் நம்மீது குற்றங்களை சுமத்துவதற்கு முனைகின்ற இந்தவேளையில், நடைமுறையிலுள்ள ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமல் விடுவதனாலும் அதிலிருந்து விலகிச்செல்வதனாலும் ஏற்படக்கூடிய சிக்கல்கள் பற்றி கவனமாய் இருப்பது அவசியம். இந்நிலையை ஈழம்வாதிகள் சர்வதேச ஸ்தாபனங்களில் தமக்குச் சார்பாக பயன்படுத்திக்கொண்டுவிடுவார்கள்" என செயலாளர் எச்சரிக்கைசெய்துள்ளார்.

அதாவது, சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்படுகிறவர்கள் தொடர்பாக ஏற்கனவே நடைமுறை ஒழுங்குவிதிகளும், பணிப்புரைகளும் எழுத்திலேயே உள்ளன. ஆனால் ஆயுதப்படையினர் இவைகளைச் சற்றும் கடைப்பிடிப்பதில்லை. கடைப்பிடிக்கும்படி வற்புறுத்தப்படுவதும் இல்லை. அதன் விளைவாக எத்தனை கொடுமைகள், அநீதிகள், எத்தனை அப்பாவிகள் சித்திரவதைகளினால் பலியானார்கள்! எவருக்கும் தெரியாது இந்த விடயங்கள் எப்படியோ சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற ஸ்தாபனங்களுக்குப் போய்க்கிடைத்துவிடுகின்றன அதனால் நாட்டின் பெயருக்கு இழுக்கு வருகின்றது தமிழர் உரிமைகளுக்காகப் போராடுகிறவர்களுக்கு அது சாதகமாகிவிடுகின்றது எனவே இனிமேலாகுதல் நடைமுறை விதிகளிலிருந்து விலகாதீர்கள் என்பதே இக்குறிப்பின் கருத்து என நாம் கருதலாம் சர்வதேச மட்டத்தில் அழுத்தமான எதிர்குரல்கள் எழுந்தபின்னரே இப்படியான பணிப்புரையொன்று பகிரங்கமாக விடுக்கப்பட்டுள்ளது.

இதனாலும் ஏதும்பயன் ஏற்பட இடமுண்டா? தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து குறிப்பாக கிழக்கு மாகாணத்திருந்து கிடைக்கும் செய்திகள் எதிர்மாறான தகவல்களையே தருகின்றன.

இதேவேளை டாக்டர் எச் டபிள்யூ ஜயவர்த்தன தலைமையிலான இலங்கை மனித உரிமைகள் நிலையம் ஆயுதப்படைகள், பொலிஸ்படையினர் மற்றும் சிறை அதிகாரிகளுக்கு மனித உரிமைகளைக் கடைப்பிடிக்கும்படிகோரி பிரசுரங்களை விநியோகித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகின்றது. இந்த ஸ்தாபனம் ஏற்படுத்தியிருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழு அடுத்த மாதம் தனது விசாரணைகளை ஆரம்பிக்கவிருக்கின்றதாம். இதுவும்கூட அரச மட்டத்திலான பிரசார ஏற்பாடுதானா என்பது விசாரணையின்போதே தெரியவரும்.

# எழுத்தாளர்களால் மனிதர்களை—— பயனுள்ளவர்களாக ஆக்கமுடியும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"மனிதர்களைப் பயனுள்ளவர்களாக்கும் பாரிய பொறுப்பு எழுத்தாளர்களுக்கே உரியதாகும். மனிதர்கள பக்குவமடையவும், சீர்பெறவும் எழுத்துக்கள் பயன்படவேண்டும் பரமனைவிட எழுத்துக்கள் பலம் வாய்ந்தவையென்று கூறக் கூடியதாக உள்ளன. பரமன் தான் எழுதியதை அழித்துவிடுவார் ஆனால் நூல்கள் காலத்தால் அழியாதவை எனவே, எழுத்தாளர் பணிகள் அழியாத இடத்தைப் பெறக்கூடிய . கல்கிபோன்ற எழுத்தாளர்களது நாவல்களிலிருந்து எத்தனையோ சிறுகதைகள் உருவாகியிருக்கின்றன. இவை இதற்கு உதாரணமாகும்."

இவ்வாறு அண்மையில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனமண்டபத்தில் நடைபெற்ற திரு. நா. சோமகாந்தன் எழுதிய "ஆகுதி" நூல் அறிமுக விழாவிற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய வித்துவான் திருமதி வசந்தா வயித்தியநாதன் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆதரவில் நடைபெற்ற இவ்விழா, ஆதீன குரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அருளுரையுடன் ஆரம்பமாகியது. யாழ். மாநகர ஆணையாளர் திரு சி. வி கே. சிவஞானம் மங்கள விளக்கேற்றிவைத்தார்.

திருமதி வசந்தா வயித்தியநாதன் தொடர்ந்து பேசுகையில், "திரு சோமகாந்தனின் ஆழமான சிறந்த உயர்ந்த கற்பனைகளை இந்த 'ஆகுதி' நூலில் காணமுடிகின்றது. இதில் சிறந்த பதினொரு கற்பனைகள் சிறப்பாகச் சித்திரிக்கப்படுகின்றன இவரது பாத்திரங்கள் மூலம் புறத்தோற்ற மனிதர்களையும், அகத்தோற்ற மனிதர்களையும் காணக்கூடிய வாய்ப்புக்கள் நிறைய இருக்கின்றன. இதனை இந்நூல மக்களுக்குப் பயனுள்ள சிறப்புக் கருத்துக்களைக் கொண்டதாக மிளிர்கின்ற வாய்ப்பைப் பெற்றுள்ளது" என்றார்.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி அ சண்முகதாஸ் ஆய்வுரை நிகழ்த்துகையில், "'ஆகுதி' நூலில் நிறைந்துள்ள கதைகள் இக்காலத்திற்கு வேண்டிய பல தத்துவங்களை நிரம்ப உள்ளடக்கியவைகளாக அமைந்துள்ளன இவற்றில் திரு. சோமகாந்தனின் கற்பனைகள் வெறும் மொகூட்டல்களாக அமையவில்லை. ஒவ்வொரு பாத்திரங்களின் இயற்கையான உணர்வுகள் இவரின் கற்பனையில் தொனிப்பதைக் காணமுடிகின்றது. பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் கருத்துக்கள் நிறைந்து கிடப்பதைக் இந்நூலின் சிறப்பம்சமாகக் காணமுடிகின்றது" என்றார்.

'ஆகுதி' நூலின் அறிமுக உரையை ஆசிரியர் க. கணேசலிங்கம் நிகழ்த்தினார்.

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செயலாளர் திரு எஸ் பாலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நல்லை ஆதீன குரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தமது அருளுரையின்போது, "எழுத்தாற்றல் என்பது இயற்கையாக இறைவனால் கொடுக்கப்படும் ஒரு சக்தி இது சாதாரணமாக எல்லாருக்கும் கிடைத்துவிட முடியாது. பேனா பிடித்தவர்கள் எல்லாரும் எழுத்தாளர்களாக முடியாது. இயற்கையான கற்பனைசக்தியும், எழுத்துக்கான அறிவும், ஆற்றலும் நிரம்பியிருக்க வேண்டியது இதற்கவசியமானதாகிறது. நேர்மையாகவும், உண்மையாகவும், மனிதர்களுக்குப் பயனுள்ளதாகவும் எழுதுபவனிடத்தில் எழுத்தின் சக்தி வலுவடைகிறது" என்றார்.

இவ்வறிமுக வைபவத்தில் 'ஆகுதி' நூலின் சிறப்புப் பிரதியை யாழ் மாநகர ஆணையாளர் திரு சி வி கே சிவஞானம் ஆதீன சுவாமிகளிடமிருந்து பெற்று விற்பனையை ஆரம்பித்துவைத்தார்.

(மண்டைதீவு நிருபர்)

# இன்று நடைபெறும் தமிழ் சிறுவர் தினம்

சிறுவர்களின் சமாதான ஊர்வலம், சிறுவர் பிரார்த்தனை, சிறுவர் பொதுக்கூட்டம், சிறுவர் போஷாக்கு விருந்து. கலை நிகழ்ச்சிகள், இசை விருந்துகள் என பல்வேறு நிகழ்ச்சிகளையும் கொண்டதான தமிழ் சிறுவர்தினம் இன்று அறவழிப் போராட்டக் குழுவினரால் நடாத்தப்படுவது பாராட்டிற்குரியதே. அவர்களது பணிமனையமைந்த கைதடி நுணாவில் சந்தியருக இவ்விழா இடம்பெறுகிறது. இதில் 25 அறவழிப் பாலர் கழகங்களில் கல்வி பயில்கின்ற 800 சிறுவர்கள் பங்கு பற்றுகின்றனர். தொண்டர்கள் ஈடுபடுகின்றனர், பொது மக்களும் கலந்து கொள்கின்றனர். விசேட மலரொன்றும் வெளியிடப்படுகிறது தமிழ்ச் சிறுவர்களின் அவல நிலையை எடுத்தியம்பவும் தமிழ்ப் பெருமக்களை ஒன்று திரட்டி எம் சிறார்களைக் காத்து வளர்க்கும் பணியில் எம் ஒவ்வொருவரது பங்கும் என்னென்ன என்பதை உணர்த்தி செயற்பாட்டை மேலும் வளர்க்கவும் இவ்விழா உதவும் என்பதில் ஐயமில்லை.

இவ்விழா அறவழிப் போராட்டக் குழுவினரின் முதல் முயற்சியோ ஆரம்ப விழாவோ அல்ல. பத்து வருடத்தை அண்டிநிற்கும் இடையறுச் சேவையாலெழுந்த நன்மரத்தின் ஒரு நறுமலரே இந்தத் தமிழ்ச் சிறுவர் தினமாகும் இன்றைய சிறுவர்கள் எம் நாளைய தலைவர்கள் என விளம்பும் இவர்களது குறிக்கோள் விளக்கத்திலிருந்தே இலட்சியம் புலனாகின்றது. இவ்வேளையில் ஈழத் தமிழர்களாகிய நாம் எமது வருங்கால அடிப்படையில் வளரஇருக்கும் இளம் சிறார்களின் இன்றைய துயர்மித நிலைமையையும் எதிர்நோக்கும் இடர்களையும் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாகின்றோம். வீடுகளில் மட்டுந்தான் இவர்கள் வாழ்கின்றார்கள் என்பதில்லை. அகதி முகாம்களிலும் எங்கள் குழந்தைகள் நிறைந்திருப்பதைக் காண்கின்றோம். தரைமட்டமாக்கப்பட்ட வீடுகளும் இடுகாடாக்கப்பட்ட கிராமங்களும் ஈழத் தமிழ்ப் பகுதிகளின் சாதாரண காட்சிகளாகின்றன. அறவழிப் போராட்டக் குழுவினரின் அளப்பரிய அகதிகள் சேவையை எண்ணும்போது இக்காட்சிகளும் மனதில் எழுகின்றன அவர்களது அறவழி என்னும் மாதாந்த வெளியீட்டிலே இன்றும் பல தகவல்களை அறியமுடிகிறது. NVDAG report எனும் ஆங்கில வெளியீடும் வெளியுலகுக்கு எம நிலையை இயம்ப உதவுகிறது.

நாக. பத்மநாதன்,
சித்தன்கேணி.

## நெருக்கடி நிலை குறித்து பேசினர்

கொழும்பு ஞாயிறு

ஐக்கியநாடுகள் சபையின் 41வது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் திரு ரிரான் பெர்ணாண்டோ நியூயோர்க் சென்றுள்ளார்.

அவர் பொதுச் சபையின் தலைவர்திரு. எச் ஆர் சௌத்திரியையும், ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம் திரு பெரஸ் டி குவெல்லியரையும் சந்தித்து தற்போதைய இலங்கையின் நெருக்கடி நிலை குறித்தும் பேச்சு நடத்தியுள்ளார். (எ)

## முதலுதவிப் பயிற்சி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

மாகாண நிறைவேற்று உத்தியோகத்தர் திரு எஸ். செல்வரஞ்சன் இப்பயிற்சிக் விரிவுரைகளை நடாத்தி வருகிறார் இவருக்கு உதவியாக வைத்திய கலாநிதி சோமசேகரம் இருந்து வருகிறார். இப்பயிற்சி வகுப்புக்களுக்கான ஒழுங்கை சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். படை அத்தியட்சகர் திரு த. நகுலராஜ் செய்திருந்தார். (வா)

## சர்வோதய ஆதரவுடன்
# மலையகத்தில் 20 மைல் நீள சமாதான யாத்திரை

(நுவரெலியா நிருபர்)

சர்வோதய இயக்கத்தின் ஹற்றன் கிளை, மலையகத்தில் 20 மைல் நீள சமாதான ஊர்வலமும் பாதயாத்திரையையும் இன்று நடத்தவுள்ளது. சுமார் 15 ஆயிரம்பேர் கலந்துகொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான விபரங்கள், சுவரொட்டிகள் பிரசுரங்கள் சனிக்கிழமை சிங்களமொழியில் வெளியிடப்பட்டன. இதனையிட்டு மலையகத் தமிழ்மக்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஹற்றனிலிருந்து மஸ்கெலியாவரை வகைகளில் ஊர்வலமும், சிவனொளிபாத மலைவரை பாதயாத்திரையும் நடைபெறுவதே சர்வோதய கிளையின் நோக்கமாகும்.

மத்திய மாகாண பொலிஸ் அதிபர், நுவரெலியா அரசாங்க அதிபர், சர்வோதய இயக்கத்தலைவர் திரு. ஏ. ரி. ஆரியரத்தின மற்றும் தமிழ்-சிங்கள பத்திரிகையாளர்கள் ஆகியோர் இவ்வூர்வலத்தில் முக்கிய இடம் பெறவுள்ளனர்.

1983ம் ஆண்டு இடம்பெற்ற வன்செயலுக்குப் பின்னர் சிவனொளிபாத மலைக்கு யாத்திரை செல்வோர் தொகை மிகவும் குறைந்துள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் நோக்கமாக அரசாங்கம் சர்வோதயக் கிளை மூலம் பாதயாத்திரையை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இன்று 15ம் திகதி சிவனொளிபாதமலை யாத்திரை நடைபெறும் தினமாகும்.

மேலும் இப்பாதயாத்திரையில் கலந்து கொள்வதற்காக தூர இடங்களிலிருந்து பொதுமக்கள் வாகனங்கள் மூலம் ஹற்றனுக்குக் கொண்டுவரப் படுகின்றனராம். [மா]

## விஜி விவகாரம்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இயக்கத்துக்கும் எதுவித சம்பந்தமுமில்லையென இவ்வியக்கம் சென்னையில் அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

இக்கடத்தலைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர் நடத்திவரும் போராட்டத்தை தமக்கெதிராக திசைதிருப்பி விட்டு அரசியல் லாபம் தேட சிலசக்திகள் முனைந்துள்ளதாகவும் அவ்வியக்கம் கூறியுள்ளது.

## போராளிகள்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மென எதிர்பார்க்கப்படுகின்றது. இக்குழுவில் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. வெங்கடேஸ்வரன், பிரபல அரசியல் யாப்பு நிபுணர் திரு. பாலகிருஷ்ணன் ஆகியோரும் உடன் இருப்பர். மூன்று தினங்கள் வரை இவர்கள் கொழும்பில் தங்கியிருப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஊ]

## புலிகள ---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'வாழ்வா சாவா என்ற சூழ்நிலையில் அற்றுக்கொண்டிருக்கும் ஸ்ரீ லங்கா அடக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் ஒன்றிணைந்து நிற்கவேண்டிய இயக்கங்கள் தங்களுக்குள் மோதிக்கொள்வதானது மக்கள் நலனையும் போராட்ட முன்னெடுப்பையும் புறக்கணிக்கும் தன்மையையும் வெளிப்படுத்தியுள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள பலாத்கார முயற்சியானது அதன் இந்திய நிலைப்பாட்டை முறியடிப்பதற்கானதே என அறிவிக்கப்பட்டுள்ளது. ஈழப் போராட்டத்தில் இந்தியாவின் தலையீடானது இயக்கங்களின் ஐக்கியத்துக்கூடாகவே மட்டுப்படுத்தப்பட்டு வந்தது. இந்நேரத்தில் முறைகேடான முரணை தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்டுவந்த அவசர நடவடிக்கையானது அனைத்து விடுதலை இயக்கங்களையும் புறக்கணித்து எமது இலட்சியத்தையே மூழ்கடிக்கக்கூடிய தலையீட்டை இந்தியா செய்வதற்கு வழி வகுத்துள்ளது. ஆதலினால் தமிழீழ விடுதலைப்புலிகள் தங்கள் முடிவுகளை மீள்பரிசீலனை செய்வது அவசியமாகும்.

நமதுமையின் நகத்தாலேயே நமது கண்களை குத்துவது போன்ற இந்நிகழ்ச்சியினை மக்கள் ஒன்றுதிரண்டு தடுக்க வேண்டுமென்பதும் இயக்கங்களின் பேச்சை நெறிப்படுத்த வேண்டுமென்பதும் அவசியமானதாகும். அவ்வகையில் இயக்கங்கள் மோதிக்கொள்கிறார்களென விலகியிருந்து பார்க்கும் மனோபாவத்தை விட்டுவிட்டு "இயக்க மோதலைத் தவிருங்கள் ஈழப்போராட்டத்தைத் தொடருங்கள்" என்ற கோஷத்துடன் அனைத்து மக்களும் ஒன்றுதிரண்டு தற்போதைய சூழ்நிலையைமாற்றியமைக்க வேண்டுமென ஈழப் புரட்சி அமைப்புவேண்டுகோள் விடுகின்றது." (மா)

## பி பி ஸி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் இன்று குறைந்தது 11 பேராவது இம்மோதலினால் பலியானார்கள் எனவும் பி பி ஸி தெரிவித்துள்ளது.

இதேவேளை, இம்மோதல்களினால் மட்டக்களப்பில் இன்று 12 பேர் பலியானார்களென்றும் இவர்களனைவரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் என்றும் நேற்றைய மோதலின்போது யாழ்ப்பாணத்தில் ஐந்துபேர் கொல்லப்பட்டதாகவும் இந்திய வானொலி தெரிவித்துள்ளது.

## புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவொரு ஈ பி ஆர் எல் எவ். இன் முகாமும் தமது இயக்கத்தினரால் சேதப்படுத்தப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

### பெண்கள் கைது

புங்குடுதீவிலுள்ள முகாம் ஒன்றில் சில பெண் அங்கத்தவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனராம்.

கிளிநொச்சியில் ஈ பி ஆர். எல். எவ் இயக்கத்தினரின் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் பலர் கைதுசெய்யப்பட்டதாகவும், மேலும் தேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெறுவதாகவும் தெரிவித்த அப்பேச்சாளர், முல்லைத்தீவு வவுனியா ஆகிய இடங்களிலும் தொடர்ந்து தேடுதல் நடத்துவருவதாகவும் தெரிவித்தார்.

மன்னாரில் தமது இயக்கத்தினரால் தடை செய்யப்பட்ட 'ரெலோ' இயக்கப் போராளிகளை அவர்கள் வைத்திருந்த போதிலும் அவர்களில் 32 ரெலோ உறுப்பினர்களைக் கைது செய்ததாகவும் அவர் தெரிவித்தார். [மா]

## எச்சரிக்கை

புங்குடுதீவு, ஞாயிறு.

புங்குடுதீவில் உள்ள மின் பாவனையாளர்களில் சிலர் கடந்த பல மாதங்களுக்கு மேலாக மின்கட்டணத்தைச் செலுத்தாததன்பேரில் அவர்களுக்கு எதிராக இலங்கை மின்சார சபையினர் கடந்தவார முற்பகுதியில் இருநூற்றுக்கும் அதிகமான சிவப்பு நோட்டீஸ்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்துள்ளனர்.

மேலும் ஏற்கனவே மின் கட்டணங்களைச் செலுத்தாதவர்களின் மின்னிணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களுக்கும் இந்த சிவப்பு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காங்கேசன்துறைப்பகுதியில்
# நெருப்புக்காய்ச்சல் தடுப்பு ஊசி ஏற்றும்பணி தீவிரம்!

மாவிட்டபுரம், ஞாயிறு.

காங்கேசன்துறைப் பகுதியில் உணவு, சிற்றுண்டி விற்பனைக் கடைகளிலும், சிகையலங்கார நிலையங்களிலும் பணிபுரிவோர் நெருப்புக்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றி அதற்கான அடையாள அட்டையைப் பெறாதுவிட்டால் இவ்விற்பனை நிலையங்களில் கடமையாற்ற முடியாதெனக் காங்கேசன்துறை ஆரம்ப சுகாதார ஒழுங்குகளின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதேவேளை மேற்படி ஒன்றியம் இம்மாதம் 16ம் திகதி காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியில் வைத்து நெருப்புக் காய்ச்சல் தடுப்பூசிகளை மேற்படி பணியாளர்களுக்கு ஏற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொண்டுளளது.

இத்தடுப்பூசி ஏற்றும் பணிக்கும் பொதுமக்கள் ஒத்துழைப்புத் தரவேண்டுமென மேற்படி ஒன்றியம் கோரிக்கைவிடுத்துள்ளது.


லிடோ

10-30, 2-30, 4-30, 6-30

BOLERO

(Strictly for Adults

Last Day

16ம் திகதி முதல்

கிழக்கே போகும் ரயில்

கலர் (புதிய பிரதி)

வெலிங்டன் திரையில்

10-30. 2-30- 6-30

M G R. -ஜெயலலிதா. அசோகன், மனோகர், சோ, சௌகார்ஜானகி

நடித்த

ஒளிவிளக்கு

அடுத்த வெளியீடு

TOO HOT TO HANDLE

(Adults only)


## கட்டாக்காலிகள் தொல்லை

புங்குடுதீவு, ஞாயிறு.

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றி வருகின்ற ஊழியர்கள் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லைகளால் பெருஞ் சிரமத்திற்குள்ளாகி வருகின்றார்கள். மாலை நேரமானதும் ஆடு, மாடுகள் தங்களின் பட்டியை நோக்கி வருவதுபோல் கூட்டம் கூட்டமாக வந்து வைத்தியசாலைக்குள்ளும் விருந்தைகளிலும் படுத்துக்கொள்கின்றன.

இதனால் அவ்வூழியர்கள் நோயாளர்களைப் பராமரிக்க முடியாததுடன் ஆடு மாடுகளை மேய்க்கவேண்டிய வேலையில் ஈடுபட வேண்டியுள்ளது. கூடவே அந்தக் கட்டாக்காலிகளின் மலசலங்களையும் காலையில் துப்பரவு செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் தங்கள் சேவைகளை மேற்கொண்டுவருவதாகத் தெரியவருகிறது.

## வடக்கு கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகளையடுத்தே இந்தியா இவ்வாறு கேட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

தமிழகத்தில் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளின் பெருந்தொகையான ஆயுதங்கள் அண்மையில் கைப்பற்றப்பட்டதையடுத்து தீவிரவாதிகள் மீது இலங்கையில் தாக்குதல் மேற்கொள்வது நியாயமல்ல என இந்திய அரசு கூறியிருப்பதாகவும் இதுவரை இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்து தனது அதிருப்தியை தெரிவித்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது. [கூ-ஊ]

## இந்தியாவிடம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை எவ்வளவு தூரம் இணங்கியுள்ளது என்பதை இந்திய அதிகாரிகள் ஆராய்ந்து உரிய வேளையில் முடிவொன்றை எடுக்கு முகமாகவே இவ்வரைபடங்கள் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

### 'ஹிந்து' கருத்து

இதேவேளை வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து அமைக்கப்படவுள்ள மாகாணசபை, அரசியல் ரீதியில் பலமாகச் செயற்படக்கூடிய வகையில் உரிய சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பதில் இந்திய அரசு தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகச் சென்னை 'ஹிந்து' பத்திரிகை கருத்துத் தெரிவித்துள்ளது.

ஆயினும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கிடையில் பௌதீகரீதியிலான இணைப்பு ஒன்றை ஏற்படுத்துமாறு இந்திய அரசு இலங்கையை வற்புறுத்தாது என்றார். இலங்கையில் இதற்குள்ள எதிர்ப்பே இதற்குக் காரணமென்றும் 'ஹிந்து' தெரிவித்துள்ளது. [கூ-ஊ]

## கைப்பற்றிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணி பொய்ப்பிரசாரங்களில் ஈடுபட்டுவந்ததும், தமது இயக்கத்தினரால் தமிழீழத்தில் தடை விதிக்கப்பட்ட 200 ரெலோ உறுப்பினர்களை மன்னாரில் இணைத்துவைத்திருந்து தமது இயக்கத்தினர்மீது தாக்குதல் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தது, ஈ பி ஆர் எல். எவ். மீது தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிட்டதென்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## இம்மாதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்த நகைகள் அனைத்தும் மீள அளிப்பதற்கான உறுதியான நடவடிக்கைகள் வங்கி நிர்வாகத்தினால் எடுக்கப்பட்ட பின்னரே இப்போராட்டம் கைவிடப்படுமென்றும் அடகுவைத்தோர்சங்கம் தெரிவித்துள்ளது.

அடகுவைத்த நகைகளை மீளப்பெறுவது சம்பந்தமாக அடகுவைத்தோர் சங்கஉறுப்பினர்களின் பொதுக்கூட்டம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டு சங்கப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன.

இதன்பிரகாரம் புதிய நிர்வாகிகள் நேற்றுக்கூடி மேற் குறிப்பிட்ட தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர்.

மேலும் வடக்கில் அனைத்து மக்கள்வங்கிகிளைகளின் வாடிக்கையாளர்களும் அந்தந்தக் கிளைகளின் முன்பாக இம்மாதம் 18ம் திகதி காலை 7 மணிக்குக் கூடி அவர்களது பிரதிநிதிகளின் கருத்துக்களுக்கிணங்க மறியல் போராட்டத்தினை தொடர்ந்து மேற்கொள்ளுமாறும் ஏனைய வாடிக்கையாளர்களையும் இப்போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. [மா]

## ஈ பி ஆர் எல் எவ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

ஈ. பி ஆர். எல். எவ். இயக்க உறுப்பினர்களே "தமிழீழத்திலுள்ள சகல மாவட்டங்களிலும் உங்கள் உறுப்பினர்கள் தம் ஆயுதங்களுடன் சரணடைந்து விட்டார்கள் ஒருசிலரே சரணடையாமல் ஓடி ஒளித்து வருகின்றனர் எனவே உங்கள் தலைமைகளைப் பாதுகாக்க வீணே போரிட்டு மடியாதீர்கள் நீங்கள் உங்கள் ஆயுதங்களுடன் எம் மக்கள் மூலமாகவோ அல்லது நேரிலோ சரணடையுங்கள் நீங்கள் உடனடியாக சரணடையும் பட்சத்தில் உங்கள் உயிருக்கு உத்தரவாதமளிக்கப்படுவதுடன் பூரண பாதுகாப்பும் உறுதி செய்யப்படும்.

தமிழீழ மக்களே!

ஈ பி ஆர் எல் எவ் இயக்கத்தினர் ஒருசிலர் தம் ஆயுதங்களை உடைமைகளை ஆங்காங்கே வீசியெறிந்துவிட்டு ஓடித்தப்பியுள்ளனர் இவ்வாறான ஆயுதங்கள், உடமைகளையோ அல்லது பாதுகாப்புக்கென உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்கள் உடைமைகளோ உங்கள் வசமிருந்தால் உடனடியாக எமது உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு ஒப்படையுங்கள் சரணடையும் ஈ பி ஆர் எல். எவ் இயக்க உறுப்பினர்களின் உயிருக்கு நாம் உத்தரவாதமளித்து உள்ளமையால் உங்களிடம் அவ்வியக்க உறுப்பினர்கள் தஞ்சம் புகுந்திருந்தால் உடனடியாக அவர்களை எம்மிடம் ஒப்படையுங்கள்"


பிரயாண ஒழுங்கு

GLORIA TRAVELS

Norway Germany

France Canada

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன் எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND) விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.

[A 3250]

## "எமது பிரதேசத்தை நாமே வளமிடுவோம்"

### முன்னாள் எம். பி. பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள் "இக்கட்டான இந்தக் காலக் கட்டத்திலும், எமது தேசத்தை வளம்படுத்த வேண்டியது எமதுப் பொறுப்பாகும் எனவே தேவரையாளி இந்துக் கல்லூரியின் தொழில் நுட்பப் பிரிவினை கொக்குவில், சம்மாந்துறைப் பகுதியில் பூரணத்துவத்துடன் இயங்கும் தொழில் நுட்பக் கல்லூரிகள் போன்று மாற்றியமைக்க வேண்டியது எமது கடமை."

தேவரையாளி இந்துக் கல்லூரியின் முழு நேரத்தொழில் நுட்பப் பிரிவின் 1986ம் ஆண்டு பயிற்சியை முடித்து வெளியேறும் மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சி மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடந்த வாரத்தில் நடைபெற்றது இந் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு த. இராசலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு வீ. ஜீவகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் உதவி அரசாங்க அதிபர் திரு வே ஐயாத்துரை கல்வி அதிகாரி திரு வ. ஈஸ்வரபாதம் தொழில் நுட்பக் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம். இராசத்தியலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள்.

மேற்படி தொழில் நுட்ப நிறுவனத்திற்கு 1987ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் நாலரை லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரா)

## "உதைபந்தாட்ட "விதி முறைகளை" மத்தியஸ்தர், வீரர்கள் அறிந்திருத்தல் வேண்டும்"

யாழ்ப்பாணம், திங்கள் உதைபந்தாட்டப் போட்டியில் ஒரு வீரர் ஈடுபடமுன் அதன் விதிமுறைகளை நன்கு அறிந்துகொண்டால், விளையாட்டு மைதானங்களில் தலைதூக்கும் அசம்பாவிதங்களை தவிர்த்துக்கொள்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும்"

இவ்வாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு வே பொன்னம்பலம், முல்லைத்தீவில் நடைபெற்ற உதைபந்தாட்ட சாம்பியன் மோதலின் பரிசளிப்புவிழாவில் கூறினார்.

அரசாங்க அதிபர் தமது உரையில் மேலும் கூறியதாவது!

உதைபந்தாட்டப் போட்டிகளின் விதிமுறைகளை வீரர்களும் மத்தியஸ்தர்களும் நன்கு அறிந்துகொண்டால் தான் போட்டிகளை திறம்பட நடாத்த முடியும். விதிமுறைகளை நன்கு அறிந்துகொள்ளாததினால்தான், அண்மையில் இங்கு நடைபெற்ற பல உதைபந்தாட்டப் போட்டிகளில் அசம்பாவிதங்கள் ஏற்பட்டதை நாம் காணக்கூடியதாக இருந்தது.

கடந்த மூன்று நாட்களாக யாழ் நகரிலிருந்து வந்த யாழ்

(7-ம் பக்கம் பார்க்க)


# சின்னமுத்து நோயானது பின்வரும் ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடியது என்பது உங்களுக்குத் தெரியுமா?

## போஷாக்கின்மை
## நியூமோனியா
## மூளை வீக்கம்
## காது கேளாமற்போதல்
## இவற்றுடன் அது உயிராபத்தைக்கூட ஏற்படுத்தக் கூடியது.

சின்னமுத்து நோயைச் சாதாரணமான ஒன்றென நாம் அலட்சியப் படுத்திவிடக் கூடாது. கவனியாது விட்டால் அது உங்கள் பிள்ளையை உடல் ரீதியிலும் உளரீதியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிடக் கூடும்.

தற்போது, நவீன வைத்திய அறிவியல் காரணமாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஒரேவேளை நோய்த்தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டால் உங்கள் பிள்ளையை அதன் வாழ்நாள் முழுவதுமே இக் கொடிய சின்னமுத்து நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்.

இப்போதே உங்கள் பிள்ளைக்குத் தடுப்பு மருந்தைக் கொடுங்கள். இந்த ஒரே வேளை மருந்து உங்கள் பிள்ளையை வாழ் நாள் முழுவதும் பாதுகாக்கும். உங்களுடைய இக் கடமையை நீங்கள் தவறாது நிறைவேற்றினால் உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் ஏற்படக்கூடிய அவசியமற்ற விபரீதத்தைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.



துரித தடுப்பு மருந்தேற்றல் தேசிய இயக்கம்
சுகாதார அமைச்சு
யுனிசெப் நிறுவனம்

இன்றே உங்கள் பிள்ளைக்கு தடுப்பு மருந்தை கொடுங்கள்
தாமதம் செய்தால் தவிக்க நேரிடலாம்.

Grant BJK&E UN 1425

## உதைபந்தாட்ட...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க தலைவர் திரு. ஈ. கே. குமரையா, உதைபந்தாட்டப்போட்டிகளின் விதிமுறைகளை, எமது மத்தியஸ்தர்களுக்கும் வீரர்களுக்கும், பொதுமக்களுக்கும். நன்கு விளக்கமாக எடுத்துக் கூறிய தன் காரணமாக, இந்த சாம்பியன் போட்டி மிகவும் சிறப்பாக நடைபெற்று முடிந்ததை நாம் காணக்கூடியதாக இருந்தது திரு. குமரையாவுக்கும் அவர் குழுவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்'' என்றார்.

### சரீர உதவி சாம்பியன்

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் விளையாட்டு கழகங்களிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் சாம்பியன் மோதலில் சரீர உதவி சனசமூகநிலைய விளையாட்டுக் கழகம் - முல்லைத்தீவு யுனைட்டட் கழகத்தை 3-1 கோல்களால் தோற்கடித்து சாம்பியன் கிண்ணத்தைப் பெற்றது. இப்போட்டிக்கு திரு ஈ கே குமரையா மத்திஉஸ்தம் வகித்தார்.

### மத்தியஸ்தர் சங்கம்

முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் திரு ஈ கே. குமரையாவினால் புதிதாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது

இப்புதிய சங்கத்தின் தற்காலிகதலைவராக முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு. எஸ். நடராசாவும், காரியதரிசியாக திரு. ஏ. ஸ்ரீஸ்கந்தராசாவும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்கள். மூன்றுபேர் கொண்ட உபகுழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

இப்புதியசங்கத்தின் பொதுக்கூட்டத்தை மிகவிரைவில் நடாத்துவதற்கு மேற்படி குழுவினர் சகல ஆயத்தங்களையும் தற்போது செய்துவருகின்றார்கள். [வி]

## சட்டத்தரணியாக சத்தியபிரமாணம்



புலோலியைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை சிறீதரன் அண்மையில் உயர்நீதிமன்ற பிரதம நீதியரசர் சர்வானந்தா முன்னிலையில் புதிய சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

இவர் புலோலி புற்றளை மகாவித்தியாலயம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவனும் புலோலியைச்சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் வந்துவான் மு கணபதிப்பிள்ளை. வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வனுமாவார்.

## மரக்கறி விதைகள்

ஒட்டுசுட்டான், ஞாயிறு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல கமநலசேவை நிலையங்களிலும், கமநல சேவை உதவி ஆணையாளர் திணைக்களத்திலும் மரக்கறி விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## இன்றைய பலன்

மாதம்; மார்கழி
திகதி; 29 (15-12-86)
கிழமை: திங்கள்
நட்சத்திரம்; ரோகினி
திதி- பூரணை

மேடம்: இனப்பூசலின் மூலம் இதயபாரம் ஏற்படும். குடும்பபிரிவுகளும் வேதனையைத் தரலாம தொழில் துறையிலும் முக்கிய கவனம் செலுத்தவும்.

இடபம்: கடமை புரியும் இடத்தில் கருத்து வேற்றுமை உருவாகும். சிறிவரும் கோபத்தை அடக்கவும். பிரயாணத்தைப் பின்போடவும்.

மிதுனம்: குடும்பநலனுண்டு வாகனச் சாரதிகளுக்கு சுருடலில் மதிப்பு உயரும். தொழில் நலனுமுண்டு

கடகம்: பகைகள் உருவாகும். சகோதர வழியாலும் துயரமுண்டு மனதிடம் வேண்டும்

சிங்கம்: மெத்தவும்பொருள் சேரும். மேலிடத்து ஆதரவும் பெருகும் உற்சாகம் பிறக்கும்

கன்னி: வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும் கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு புத்திரர் சந்தோசமும் உண்டு

துலாம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளை கடத்துவீர்கள் அவசர முடிவைத் தவிர்த்துக் கொள்ளவும். கடமையில் கண்காணிப்பு அவசியம்

விருச்சிகம்: பிரச்சனைகள் இன்று சமரச முடிவைத் தரும் குடும்ப வாழ்க்கையும் சிறக்கும். தொழில் முயற்சி பலிக்கும்.

தனுசு: ஆசாரக் குறைவான சம்பவங்கள் இம்பெறும் குடும்பத்திலும் பிணக்குகள் தோன்றி மறையும். சிறுவிபத்தும் ஏற்படலாம்.

மகரம்: பிதாவழிப் பெருமையுண்டு. இன்று முன்னணியில் நிற்பீர்கள். புண்ணிய விருப்பும் மேலிடும்.

கும்பம்: வியாபார விருத்தியுண்டு வாழ்க்கையில் சுபகருமம் ஏற்பட இடமுண்டு, வாகன நலனுமுண்டு

மீனம்: நீண்டநாள் கடன் இன்று நிவர்த்தியாகும்; உற்சாகமாக நாளைக் கழிப்பீர்கள்

திருமலை
வே. ரவீந்திரன்

## விண்ணப்பங்கள் பரிசீலனை

கொழும்பு, ஞாயிறு காத்தான்குடியில நடைபெற்ற சம்பவங்களால் க. பொ. த சாதாரணம்) பரீட்சை எழுத முடியாமல் தவறவிட்ட பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை கல்வித் திணைக்கள அதிகாரிகள் பரிசீலித்து வருகின்றனர். (க)

## 50 ரூபா அபராதம்

பண்டத்தரிப்பு ஞாயிறு வழக்கொன்றில் சாட்சியமளிக்க வருமாறு மூன்று தடவைகள் கட்டளை அனுப்பப்பட்டும் நீதிமன்றுக்கு சமுகமளிக்கத் தவறிய நபரொருவருக்கு வட்டுக்கோட்டை சிழக்கு தமிழீழ கிராமநீதிமன்று 50 ருபா அபராதம் விதித்தது.

பிடி ஆணை மூலம் நீதிமன்றத்திற்கு கொண்டுவரபபட்ட இந்த நபர் அபராதம் விதிக்கப்பட்டதுடன் எச்சரிக்கையும் மன்றினால் விடுக்கப்பட்டது.


RYOBI | POWER TOOLS

மரவேலை, றின்கர் வேலை, இரும்புவேலை செய்பவர்களுக்கு

றியோபி கருவிகள்

எலெக்றிக் டிறில்ஸ் Electric Drills)
கிரைன்டர். அன் டிஸ்க் சான்டர்
(சாணைக்கல் கருவி)
(Grinder and Disc Sander)
சைனீஸ் எலெக்றிக் பெஞ் டிறில்
(Electric Bench Drill)

விலை 1,235/- முதல்

உங்கள் தேவைகளுக்கு
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்:

ஓவர்சீஸ் இன்ரநஷனல்
(முகமதலி அப்துலலி பின்ஞல்)
5-7, பெரியகடை — யாழ்ப்பாணம்.
போன் : 22641. A 3332


## ஓராண்டு நினைவஞ்சலி



திரு மாணிக்கம் செல்லையா
(சுன்னாகம் தெற்கு)
தோற்றம்: 15 - 03 - 1930
மறைவு: 26 - 12 - 1985
திதி: 15 - 12 - 1986

ஓராண்டுக்காலம் ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எமது இதயத்தில் உறைந்தேயிருக்கும்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இன்று (15 - 12 - 86) இல்லத்தில் நடைபெறும் ஆண்டு கிரிகையிலும், மாலை உடுவில் டெரிய நாயகி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் வசனக் கையளிப்பிலும் பூசையிலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்.
(C 6325)

## விசேட பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி பூங்காவனம் வீதியூடாக பிரயாணம் செய்யும் சகல தூர சேவை பஸ், லொறி உரிமையாளர்களையும் 15-12-86 திங்கள் (இன்று) காலை 10-00 மணிக்கு யாழ் மணிக்கூட்டு வீதியில் இருக்கும் ஹோட்டல் ஞானாஸ் இல் வீதி திருத்தும் சம்பந்தமான கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் சகல தூரசேவை பஸ், லொறி உரிமையாளர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

இங்ஙனம்
ஆ. மு. இராஜகோபால்
செயலாளர்
வடமாநில லொறி போக்குவரத்துச் சங்கம்.
C 6381


## பிரயாண ஒழுங்குகள்

| | | | |
|---|---|---|---|
| S முருகதாஸ் | அச்சுவேலி | H | 0360186 |
| V P வாசு | — | H | 0391415 |
| S. மகாலிங்கம் | — | J | 0043 23 |
| S. செல்லத்துரை | — | H | 0350967 |
| P. P உதயகுமாரன் | — | H | 0255049 |
| V. சுப்பிரமணியம் | — | H | 0358521 |
| M. சிவராசா | — | H | 0367324 |
| P. கிருஷ்ணமூர்த்தி | கோண்டாவில் | H | 0296768 |
| S. R. பிரபாகரன் | கோண்டாவில் | H | 0443701 |
| K. செல்வநாயகம் | காங்கேசன்துறை | H | 0325412 |
| K. V செல்வவீரசிங்கம் | யாழ்ப்பாணம் | H | 0072975 |
| K, தவலிங்கம் | புத்தூர் | H | 0285169 |
| R. இராசரெட்ணம் | மல்லாகம் | J | 0082142 |
| T சந்திரகுமார் | — | H | 0349045 |
| N. P ஜெபகுமார் | — | H | 0316289 |
| P கிருஷ்ணராஜா | புத்தூர் | G | 0083661 |
| K. இரவீந்திரன் | சங்கானை | H | 0124689 |
| K. ஜெயராம் | — | J | 0056335 |
| S. அமரன் | — | J | 0056315 |
| S. சத்தியசீலன் | — | H | 0429428 |
| V. E விகிதராசா | கோண்டாவில் | H | 0310570 |
| C T K. பார்த்திபன் | ஊரெழு | H | 0349901 |
| M. N. மர்குஸ் | அச்சுவேலி | H | 0422006 |

மேற்கூறிய நபர்களுக்கு பிரயாண ஒழுங்குகள் முற்றுகிவிட்டன. உடனடியாக எமது அலுவலகத்திற்கு வந்து தொடர்புகொள்ளவும்.

யூனிவேர்சல் ஏஜென்சி
125, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்-பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக
(A 3252)



மூவர் நிலையங்களுக்கான அங்கீகாரத்துடன் குடாநாட்டில் தொடர்ந்தும் சேவையாற்றுகின்றோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## பிரயாண ஒழுங்குகள்

*டென்மார்க் *கனடா
*லண்டன் (U. K.) ★ஜெர்மனி

ஆகியநாடுகளுக்கு எமது முகவர் உடனுக்குடன் உங்களை அழைத்துச் செல்வார்.

சவூதி, குவைத்

கிளீனேர்ஸ், Gardeners, Labourers, Drivers இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும் வருமான ஒழுங்கு கூடிய கெதியில் செய்துதரப்படும்.

சிங்கப்பூர், குவைத்

பெண்களுக்கு வருமான ஒழுங்குகள் இருப்பிடமும் சாப்பாட்டு வசதியுடன் துரித கதியில் செய்து தரப்படும்.

பாஸ்போட். பொண்ட் (BOND), விசா, ரிக்கற் முதலியன துரித கதியில் செய்து தரப்படும்.

GROUP ATLANTIC
TRAVELS

இல. 163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோவில் முன்பாக) [A3223]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
15-12 86 திங்கட்கிழமை

# "நாம் பதவிக்கு வந்தால் தமிழருடன் ஜே. ஆர். செய்யும் உடன்படிக்கைகளை ஏற்கமாட்டோம்"

## — சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, ஞாயிறு
"எமது கட்சி பதவிக்கு வந்தால் ஜனாதிபதி ஜயவர்த்தன தலைமையிலான அரசாங்கம் தமிழர்களுடன் செய்துகொள்ளும் எந்த ஒரு உடன்படிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளமாட்டாது.

இலங்கை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா அக்கட்சியின் வாலிப முன்னணி பிரதிநிதிகளின் கூட்டத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். சுகததாஸ அரங்கில் நேற்று முன்தினம் இக்கூட்டம் நடைபெற்றது.

தேர்தல் ஆணையாளரின் அறிக்கைப்படி 82ம் ஆண்டு நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பு முறை முறையற்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் இவ் வாக்கெடுப்பின் மூலம் பதவிக்குவந்த ஜயவர்த்தன அரசாங்கம் சட்டவிரோதமானதாகையினாலேயே தாம் ஜயவர்த்தன அரசின் உடன்படிக்கைகளை அனுசரிக்கப்போவதில்லை எனவும் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். (ஊ)

## ஸ்மிதா பட்டேல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் தலைசிறந்த நடிகைக்கான விருதைப் பல முறை பெற்ற இவர் அண்மையில்தான் குழந்தையொன்றை பெற்றெடுத்தார். (ஊ)

## இராணுவத்திற்கு பெருமளவு பொருட்கள்

சுன்னாகம், ஞாயிறு
காங்கேசன்துறை துறைமுகத்தில் இராணுவத்தினருக்கென பெருமளவு மூட்டைகள், சாக்குகள் மற்றும் பெரிய பெட்டிகள் கடற்படையின் பாரிய படகு ஒன்றில் நேற்று முன்தினம் மாலையில் கொண்டுவந்து இறக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

பாரியபடகிலிருந்து அப்பொருட்கள் இறக்கப்படும்போது மூன்று சிறிய பீரங்கிப் படகுகள் அவற்றுக்கு பாதுகாப்புவழங்கின.

சென்றமாத இறுதியிலும் இதே பொருட்கள் கொண்டுவந்து இறக்கப்பட்டு பாரிய வாகனங்கள் மூலம் அவை பலாலிக்குஎடுத்துச்செல்லப்பட்டன. குறிப்பிடத்தக்கது.

## தேசிய கிறிஸ்தவ சங்க குழு வடக்கில் பல்வேறு இடங்களுக்கும் விஜயம்!

யாழ்ப்பாணம், திங்
யாழ் மக்களின் இன்றைய நிலையை நேரில் கண்டறியவும் அவர்களுடன் கலந்துரையாடவும் கொழும்பிலிருந்து வந்த தேசியகிறிஸ்தவ சங்கக்குழுவினர் நேற்றுக்காலை ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள தேவாலயத்திற்குச் சென்று அங்கு சகல திருச்சபை அங்கத்தவர்களையும் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

தேசியகிறிஸ்தவசங்க உறுப்பினர் குழு நேற்றுக்காலை வல்வெட்டித்துறைக்கும் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானித்தது.

கிறிஸ்தவசங்கக்குழுவின்வல்வெட்டித்துறை விஜயம் பற்றி அருட்திரு ஆர். ஜெ நேசன் அடிகள் கருத்துத் தெரிவிக்கையில்:

ஆயுதம் ஏந்திய இளம் பேராளிகளைத் தாம் சந்தித்து உரையாடியதாகவும், அவர்களின் ஆயுதமேந்திய நிலைக்குரிய காரணத்தை அறிந்துகொண்டதாகவும் கூறினார். (வா)

## யு எஸ். செனட்டர் கொழும்பு விஜயம்

கொழும்பு, ஞாயிறு
இந்திய இணையமைச்சர் குழு கொழும்புவரும் வேளையில அமெரிக்கக் காங்கிரஸின் செனட்டரான திரு ஸ்ரீவன் சொலார்ஸும் இங்கு வருகைதரவுள்ளார். இவர் செவ்வாய்க்கிழமை இங்கு வரவுள்ளார்.

4 நாட்கள் வரை இங்கு தங்கவுள்ள திரு சொலார்ஸ் ஜனாதிபதியையும் அரசாங்க தலைவர்களையும் சந்திக்கவுள்ளார் இலங்கையின் இனப்பிரச்னையைத் தீர்த்து வைக்க இந்தியா மேற்கொண்டுள்ள முயற்சிகள் பற்றியும் அவருக்கு விளக்கமளிக்கப்படவுள்ளதாக அரசாங்க உயர் மட்டப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். [கூ-ஊ)

## மோட்டார்சைக்கிள் விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், திங்
தயிர்வாங்கக் கடைக்குச் சென்றவர், மோட்டார் சைக்கிள் விபத்தில் பலியானார்.

இப் பரிதாபசம்பவம் நேற்று முன்தினம் நாச்சிமார் கோவிலடிக்கு அண்மையில் இடம் பெற்றது

யாழ் செயலகத்தில் கடமையாற்றும் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த அரியகுட்டி இராஜேந்திரம் (55 வயது) என்பவரே இந்த விபத்தில் பலியானவராவார்.

இவரின் மரணவிசாரணையை பதில் நீதவான் க. கேசவன் நடத்தினார் டாக்டர் ஈஸ்வரதாசன் பிரேத பரிசோதனை செய்தார். [மா]

# மரண அறிவித்தல்

### தினகரம்பிள்ளை கந்தசாமி

(சாமி கல்லுடைக்கும் இயந்திர உரிமையாளர்)

தினகரம்பிள்ளை கந்தசாமி 14-12-86 அன்று காலமானார். ஈமக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறையில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, மக்கள்.

தெல்லுலுவை,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை. (C-6385)

### முத்து இராசையா

கொக்குவில் கிழக்கு முத்து இராசையா அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் கனகம்மாவின் [பூரணம்] அன்புக்கணவரும், சரஸ்வதி, மனோகரன், மகேசனின் அன்புத் தந்தையும், சபாரத்தினம், மகேசுவரி (மலேசியா), ஜெகதாம்பிகையின் மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 15 12 86 இன்று திங்கள் காலை 10-00 மணிக்கு கொக்குவில் மயானத்தில் தகனம்செய்யப்படும். உற்றார் உறவினர் இதனை ஏற்றுக் கொள்ளவும்.

(C-6393) தகவல்; இ. மகேசன்.

### செல்லையா நாகலிங்கம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுதுமலை வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய காலம்சென்ற செல்லையா செல்லமுத்துவின் மகன் நாகலிங்கம் 14-12-86ல் காலமாகிவிட்டார் அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், சாந்தாதேவி சிவானந்தனின் (கனடா) அன்புத் தந்தையாரும், விசுவலிங்கம் சிவானந்தனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராசையா, சண்முகநாதன், வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்கள் அம்பலவாணர், கனகசிங்கம் சிவகாமியம்மா, குமாரசுவாமி கனகம்மா, விஜசித்தம்பி சின்னம்மா, தியாகராசா, விசுவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-2-86 (இன்று) திங்கட்கிழமை சுதுமலை வடக்கு இல்லத்தில் நடைபெற்று 10 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்

தகவல்: கு. கணேசதாஸன்,
சுதுமலை வடக்கு.

(C-6390)

### அரியகுட்டி இராசேந்திரம்

கொக்குவிலைச் சேர்ந்த அரியகுட்டி இராசேந்திரம் (சிறு கைத்தொழில் பகுதி யாழ். கச்சேரி) அகால மரணமானார் இவர் புவனேஸ்வரி (ஆசிரியை, ஞான பண்டித வித்தியாசாலை) யின் அன்புக்கணவரும், சசிகலா (கனடா), அமிர்தகலா, தயாளன் (கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்), ஜெயாளன், சுகந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும், குகதாசன் (கனடா), M. அல்பிரட் (விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனுமாவார். இறுதிச் சடங்குகள் இன்று (15-12-86) மாலை 4-00 மணிக்கு நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும், [C-6395]

# மரண அறிவித்தல்

### திருமதி செல்லமுத்து சவரிமுத்து

மாவிட்டபுரம் திருமதி செல்லமுத்து காலமாகிவிட்டார். இவர், காலஞ்சென்ற சவரிமுத்துவின் மனைவியும், காலஞ்சென்ற முருகேசு (சாரதிப் பயிற்சியாளர்). திருமதி சரஸ்வதி விஜயரத்தினம், குணரத்தினம் (இலங்கை வங்கி ஊர்காவற்றுறை), நடராசா (இலங்கை வங்கி, மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி கனகம்மா முருகேசு, காலஞ்சென்ற விஜயரத்தினம் மாவிட்டபுரம்), பியாற்றிஸ், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், யோகராணி, ஆந்திராணி, புஸ்பராணி, மல்லிகாராணி, ஜெயராணி, ஸ்ரீரஞ்சிதன், இரவிச்சந்திரன், இரவீந்திரன், விஜயகுமாரி கௌரி, உமா, வசந்தா, கவிதா, றீகன், ராஜதீபன், குபேரா, சுமங்களா ஆகியோரின் பேத்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 16-12-86 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில் கொக்குவில கிழக்கு சம்பியன் வீதி, இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காகக் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். [C-6396]

### அருளப்பு ஜேக்கப் [அல்பேட்]

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் கிளிநொச்சி ஜெயந்தி நகரில் வசித்துவந்தவருமாகிய ஆற்றுப் பள்ளக்குளத்தாக் அபிவிருத்திச்சபையின் முன்னைய லிகிதருமாகிய அருளப்பு ஜேக்கப் (அல்பேட்) அவர்கள் 13-12-86 கிளிநொச்சியில் காலமாகிவிட்டார். இவர் ஜேக்கப் கிறேஸ் (சின்னம்மா) என்பவரின் அன்புக்கணவரும், அரியமலர் ஐயாத்துரை செல்வராணி மாணிக்கம், அரியரட்ணம் (கிளிநொச்சி) புஸ்பமலர் விஜயரட்ணம் ஆகியோரின் அன்புத் தந்தையும், S A ஐயாத்துரை (சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) M.S மாணிக்கம் (யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கம்) நீற்றுரெஜினா அரியரட்னம், N. A. விஜயரட்னம் (புத்தளம் சீமெந்து கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், காலஞ்சென்ற இம்மனுவல், காலஞ்சென்ற கிறிஸ்சோஸ்ரம், காலஞ்சென்ற மரியநாயகம், மகடலின் கிறிஸ்தோப்பர், அலோசியஸ் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார் அன்னாரின் பூதவுடல் 14 12-86 ஞாயிற்றுக்கிழமை 4 30 மணிக்கு ஜெயந்திநகர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலியின்பின் ஆனந்தபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ஜேக்கப் அரியரட்ணம்,
32, ஜெயந்திநகர், கிளிநொச்சி.

[C6383]

### வேலுப்பிள்ளை தம்பு தியாகராஜா

கொக்குவில் மேற்கு கேணியடியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தம்பு தியாகராசா காலமானார். அன்னார் திருமதி பவளத்தின் அன்புக்கணவரும், விஜயரட்ணம், திருமதி பாக்கியலட்சுமி நடராசா, திருமதி தனபாக்கியலட்சுமி பரராசசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை யாழ்/ இந்து மகளிர் கல்லூரி), Dr குமாரசாமி (அமெரிக்கா), திருமதி குமரேஸ்வரி ஜெகநாதன், திருமதி கமலேஸ்வரி நடேசன் ஆகியோரின சகோதரனும், மகாராசா Railway Guard Batticaloa) மகேஸ்வரன் (இ போ. ச சோண்டாவில்), மகாலட்சுமி, மங்களேஸ்வரி, மரகதவல்லி, மாணிக்கவல்லி (சங்கீத ஆசிரியை), மனோகரி அம்மா ஆகியோரின் அன்புத்தந்தையும், தியாகராசா (பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), தருமதுரை, மகாலிங்கம், சோதிலிங்கம் மகேஸ்வரி, கமலாதேவி, அன்னலிங்கம் ஆகியோரின் அன்புமாமனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திங்கட்கிழமை (15-12-86 இன்று) காலை 10 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: மைக்றோ கொப்யூனிக்கேசன்,
குளப்பிட்டி சந்தி, கொக்குவில்.

[C-6391]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 19 6-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49 Telegrame :Eelanadu Telephone: 22389—24126